முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1290

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

11.04.2023, செவ்வாய்கிழமை

1. வரம்பெற்று வந்த வள்ளலே
வையகம் காத்திடும் அண்ணலே
தரம் மிக்க தொண்டர் படைகளை உருவாக்கி
தரணியை ஞான வழிகட்கு மீட்க வந்த வடிவேலன் என் அவதார ஞானியே
2. ஞானியே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
நாட்டிடுவேன் ஞான அறிவுரை ஆசி
(சுபகிருது வருடம் பங்குனி மாதம் 28 ம் நாள், 11.04.2023, செவ்வாய்கிழமை)
இனிமைகொண்டு நீ தருகின்ற உபதேசம்
இவ்வுலகோர்க்கு அருமருந்தாக ஆற்றல்கூட்டும்
3. ஆற்றல்பட நீ தருகின்ற அருளமுது
அருமருந்தாக உலகோர்க்கு பசிபிணி விரட்டி
விரட்டியே பரிபூரண ஞான பலத்தை
விளக்கியே உலகோருக்கு பிறவா பேற்றுக்கு
4. பேற்றுக்கு உண்டான உயர்வழியை
பிரணவ சக்தியாக வழங்கி நிற்கும்
வழங்கி நின்று உலகோர்க்கு மீட்பு தன்னை வரமாக நீ தருகின்ற தீட்சைவழி
சரவணப்பெருமான் யான் பூரணமாய் சர்வசக்தியாய் கலந்தருள்புரிகின்றேன்
5. அருள்படவே அரங்கன் நீ கலியுகத்தின்
அனைத்து மாற்றத்துக்கும் மகா வித்தாக
பெருமைபட என் சூட்சும சக்தியாக
பிரணவ ஒளியாக வந்து அவதரித்துள்ள
6. உள்ளபடி அரங்கன் நீ சொன்னால் போதும்
உலகமே நடுநடுங்கி உன் திருவடிக்கு
மண்ணுலகில் சரணாகதி கொண்டு இனிதே
மகத்துவம்பட வழிநடக்கும் வளமும் இருக்க

7. இருக்கவே அரங்கன் நீ உலகோரை எண்ணி
இனிதே அவர்கள் பூரண சரணாகதி
வினைவென்று வரவேண்டும் எனக்கருதி
இயம்பிடுவேன் அமைதிபட வழிநடத்தி

8. அவரவர் எண்ணங்கள் தக்கவாறு
ஆளுமை புரிகின்ற அரங்கஞானியே
ஞானியே உன் எண்ணம் வழிஇனிதே
ஞானவான்கள் படை இன்னும் சிறந்து

9. சிறந்த மாற்றமாக இந்த கலியுகம்
செப்பிடுவேன் ஞான யுகமாற்றத்துக்கு வரக்கூடும்
சுப்ரமணியர் யான் வழங்கிய
ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–